செ.வெ.எண்.52 நாள்:29.10.2020

# நீலகிரி மாவட்டத்தில் 02.11.2020 முதல் அனைத்து கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற உள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப.. அவர்கள் தகவல்

---

மத்திய அரசு கொரோனா வைரஸ் தொற்றை ஒரு பேரிடராக அறிவிக்கை செய்துள்ள நிலையில் கொரோனா வைரஸ் முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக பொதுமக்கள் கூடும் இடங்களில் வைரஸ் தொற்று ஏற்பட வாய்ப்பு உள்ளதால், பொதுமக்கள் நலன் கருதி வாரந்தோறும் திங்கட்கிழமை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்று வந்த மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் தற்காலிகமாக பொதுமக்கள் நலன் கருதி பிரதிவாரம் திங்கட்கிழமை தோறும் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும் கீழ்கண்டவாறு நடைபெற உள்ளது.

<u>வட்ட வாரியாக மனுக்களைப் பெறும் அலுவலர்களின் விபரம்.</u>

| வ. எண் | வட்டம் | நடைபெறும் இடம் | தலைமையேற்கும் அலுவலர் | |
|---|---|---|---|---|
| | | | உதவி ஆட்சியர் / கோட்டாட்சியர் | வட்டாட்சியர் |
| 1. | உதகை | கோட்டாட்சியர் அலுவலக வளாகத்தின் முன்புறம், உதகை | 09.11.2020<br>23.11.2020 | 02.11.2020<br>16.11.2020<br>30.11.2020 |
| 2. | குந்தா | வட்டாட்சியர் அலுவலக வளாகத்தின் முன்புறம், குந்தா | 02.11.2020<br>16.11.2020<br>30.11.2020 | 09.11.2020<br>23.11.2020 |
| 3. | குன்னூர் | கோட்டாட்சியர் அலுவலக வளாகத்தின் முன்புறம், குன்னூர் | 09.11.2020<br>23.11.2020 | 02.11.2020<br>16.11.2020<br>30.11.2020 |
| 4. | கோத்தகிரி | வட்டாட்சியர் அலுவலக வளாகத்தின் முன்புறம், கோத்தகிரி | 02.11.2020<br>16.11.2020<br>30.11.2020 | 09.11.2020<br>23.11.2020 |

| வ. எண் | வட்டம் | நடைபெறும் இடம் | தலைமையேற்கும் அலுவலர் | |
|---|---|---|---|---|
| | | | உதவி ஆட்சியர் / கோட்டாட்சியர் | வட்டாட்சியர் |
| 5. | கூடலூர் | கோட்டாட்சியர் அலுவலக வளாகத்தின் முன்புறம், கூடலூர் | 09.11.2020<br>23.11.2020 | 02.11.2020<br>16.11.2020<br>30.11.2020 |
| 6. | பந்தலூர் | பந்தலூர் அரசு மேல்நிலைப்பள்ளி பள்ளி மைதானம். | 02.11.2020<br>16.11.2020<br>30.11.2020 | 09.11.2020<br>23.11.2020 |

அது சமயம், பொதுமக்கள் தங்களது மனுக்களை சமூக இடைவெளியினைக் கடைபிடித்தும், அனைவரும் முகக்கவசம் அணிந்தும் அந்தந்த வட்டாட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்திற்கு தலைமையேற்கும் அலுவலரிடம் மனுவினை அளித்துப் பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.